# 50 ஆயிரம் தொழிலாளர்களுக்கு - ரூ.45 கோடியில் 'திறன் மேம்பாட்டுப் பயிற்சி'

# திருக்குவளை தொழிற்பயிற்சி நிலையத்தில் ரூ.3 கோடியில் புதிய மாணவர் விடுதி!

## சட்டப்பேரவையில் 'தொழிலாளர் நலன்' மானியக் கோரிக்கையில் அமைச்சர் சி.வெ.கணேசன் பதிலுரை...

7ஆம் பக்கத் தொடர்ச்சி

தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என்ற முறையிலே முதலமைச்சர் அவர்களோடு சென்றிருந்தேன். அங்கு சென்று factory உள்ளிட்ட எல்லா இடங்களையும் பார்த்தார்கள். அங்கு சென்று பார்க்கும்போது, எல்லாம் ஒரே இடத்தில் செய்வதில்லை. அந்தக் கலவை, chemical எல்லாம் முதலில் ஒரு இடத்தில் mixing செய்வார்கள். mixing செய்த பிறகு அடுத்து, filling. filling என்றால் அந்த வெடியின் ஓட்டைக்குள் போட்டு fill செய்வது, filling. அதற்குப் பிறகு finishing, அதை முழுமைப்படுத்துவது finishing. அதற்குப் பிறகு அந்தப் பக்கம் சென்ற பிறகுதான் packing. Packing முடிந்து despatch ஆகி போகும்.

### எந்த முதல்வரும் போகாத பட்டாசு தொழிற்சாலை முதல்வர் மு.க.ஸ்டாலின் முதன்முறையாக!

இதையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு இடமாக பார்வையிட்டு எல்லா தொழிலாளர்களிடத்திலும் அவர்களுடைய குறைகளைக் கேட்டறிந்து வந்தார்கள். வரும்போது ஒரு அம்மாவிடம் சென்று கேட்டார்கள், அம்மா உங்களுக்கு என்ன அம்மா குறை இருக்கிறது என்று கேட்டபோது, அந்த அம்மா என்ன தெரிவித்தார் என்றால், ஐயா இதுவரையிலும் இந்த பட்டாசுத் தொழிற்சாலைக்கு எந்த முதலமைச்சரும் வந்ததில்லை. நீங்கள் வந்ததற்கு உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்று முதலில் அந்த அம்மா தெரிவித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அம்மா தெரிவித்த பிறகு, நம்முடைய முதல்வர் அவர்கள் கேட்டார்கள், உனக்கு என்ன அம்மா வேண்டும், என்ன குறை என்று கேட்டார்கள். அதற்கு அந்த அம்மா சொன்னது, ஐயா நாங்கள் ஒவ்வொரு நாளும் எங்களுடைய உயிரை பணயம் வைத்துத்தான் இந்த வேலையை செய்து கொண்டிருக்கிறோம். அதனால், ஒருவேளை நாங்கள் இறக்க நேரிட்டால், அப்போது அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பிறகு அந்த அம்மா சொன்னது, ஒருவேளை அப்படி இறக்க நேரிட்டால் எங்களுடைய குழந்தைகளை நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். அதில் குறிப்பாக எங்களுக்குப் பின்னால் அந்தக் குழந்தைகளுக்கு கட்டாயமாக கல்வி உதவி செய்திட வேண்டுமென்று அந்த அம்மா சொன்னார்கள். முதல்வர் அவர்கள் ஈரக் கண்களோடு அங்கிருந்து புறப்பட்டு வந்து ஓய்வு இல்லத்திற்கு வந்த பிறகு உடனடியாக சொன்னார்கள்,

பட்டாசு தொழிற்சாலையில் பணிபுரிகின்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு அவர்களுடைய தாய், தந்தை இறந்துவிட்டால், அவர்கள் படிக்கின்ற கல்விச் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும் என்று உத்தரவிட்ட முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, அவர்கள் 18 வயது நிறைவடைகின்ற வரையில் அவர்களுடைய அனைத்துப் பராமரிப்பு செலவுகளையும் அரசே ஏற்குமென்று உத்தரவை போட்டவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, சொன்னதோடு அல்ல, உடனடியாக அதற்கான தொகை ரூ.5 கோடி நிதியை அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளித்து, அரசாணை பிறப்பித்த முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### அரசு ஈடுறுதி திட்டம்!

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் என்பது அமைப்புசார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், அவர்களை சார்ந்தோர்களுக்காகவும் செயல்படுகின்ற சமுதாய பாதுகாப்புத் திட்டமாகும். தமிழ்நாட்டில் 43.77 இலட்சம் தொழிலாளர்களும் மற்றும் 1.75 கோடி தொழிலாளர்களின் குடும்பத்தைச் சார்ந்தோர்களும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுகின்றனர். தமிழ்நாட்டில் 11 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளும், 241 ஈட்டுறுதி மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தொழில் வளர்ச்சியும், உற்பத்தியும், பொருளாதார வளர்ச்சியும் எவ்வளவு முக்கியமோ அதைவிட பன்மடங்கு தொழிலாளர்களின் உடல் நலமும், மன நலமும் முக்கியம் என்ற அடிப்படையில் முதலமைச்சர் அவர்களின் உத்தரவுபடி, கடந்த நான்கு ஆண்டுகளில் 19 ESI மருந்தகங்கள் புதியதாக தொடங்கப்பட்டுள்ளன என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். "உலக நாடுகளில் ஆங்காங்கே அரசியல் வேறாயினும், உழைப்பு ஒன்றே ஒன்றுதான்; உழைப்போர் உலகமும் ஒன்றே ஒன்றுதான்; உழைப்பு நல்கி பிழைப்போர் அனைவரும் உடன்பிறப்புகள்தான்; ஒரு தாய் பெற்ற நற்றவப் பிள்ளைகள்தான்" என, தாய் காவியத்தில் உழைப்பாளிகளைப் பற்றிக் கூறியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். இதன் அடிப்படையில் தொழிலாளர் நலன் காக்கும் அரசாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அரசு வீரநடை போட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

### டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த 120 இளைஞர்களுக்கு ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் உணவு பதப்படுத்தும் தொழில் தொடங்க தேவையான திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.

### அறிவிப்புகள்

1. திருக்குவளை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவர்கள் தங்கிப் பயிலும் வண்ணம் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதிய மாணவர் விடுதி கட்டடம் கட்டப்படும்

2. தமிழ்நாட்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் திறன் பயிற்சி பெறுவதற்கான சூழலை மேம்படுத்தும்பொருட்டு, 32 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் பழைய கட்டடங்களின் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் 67 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும்

3. தொலைதூரப் பகுதிகளிலிருந்து வந்து பயிலும் மாணவர்களின் வசதிக்காக அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலுள்ள 50 விடுதிகள் 22 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்

4. கட்டுமானத் தொழிலாளர்கள் அவர்களது அன்றாடப் பணி தொடர்பாக அதிக அளவில் காலையில் கூடி காத்திருக்கும் இடங்களில், கட்டுமானத் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், குடிநீர் மற்றும் இதர அடிப்படை வசதிகளுடன்கூடிய 50 வசதி மையங்கள் 20 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்

5. கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய உறுப்பினராக இருந்து 60 வயது பூர்த்தி அடைந்து, குடும்பத்தினரின் கவனிப்பும் பராமரிப்பும் இல்லாத கட்டுமானத் தொழிலாளர்கள் தலா 50 நபர்கள் தங்கும் வகையில் உணவு மற்றும் உறைவிட வசதிகளுடன் சென்னையில் இரண்டு முதியோர் இல்லங்கள் தொடங்கப்படும்

6. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த மற்றும் பதிவு செய்யாத தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் பணியிடத்து விபத்து மரண உதவித் தொகை 5 இலட்சம் ரூபாயிலிருந்து 8 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்

7. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகைகளோடு கூடுதலாக செவிலியர் (Nursing) பட்டயப் படிப்பு பயில 3 ஆயிரம் ரூபாய், உணவு தயாரித்தல் மற்றும் சேவை (Catering and Services) பட்டயப் படிப்பு பயில 3 ஆயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகை ஆண்டுதோறும் வழங்கப்படும்.

8. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு முறையான பட்டப் படிப்பு, முறையான பட்ட மேற்படிப்பு, தொழிற்கல்வி பட்டப் படிப்பு மற்றும் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு போன்ற உயர் கல்வி பயில தற்போது வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை, கூடுதலாக ஆயிரம் ரூபாய் உயர்த்தி வழங்கப்படும்.

9. பதிவு செய்துள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு முனைவர் பட்டப் படிப்பு (Ph.D) பயிலும் நேர்வில், ஒரு கல்வி ஆண்டுக்கு 15 ஆயிரம் ரூபாய் வீதம், மூன்று ஆண்டுகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

10. பெண்கள் தன்னம்பிக்கையோடு ஆட்டோ ஓட்டும் சுயதொழில் செய்து வாழ்க்கையில் முன்னேறுவதை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 1,000 பெண்/திருநங்கை ஓட்டுநர்கள் சொந்தமாக புதிய ஆட்டோ வாகனம் வாங்கும் செலவினத்தில் தலா ஒரு இலட்சம் ரூபாய் மானியமாக, வழங்கப்படும்.

11. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவுபெற்ற தொழிலாளர்களின் திறனை மேம்படுத்த, கட்டுமான வேலை, கம்பி வளைப்பு வேலை, தச்சு வேலை, மின் பணியாளர் வேலை, பிளம்பர், வெல்டர், வர்ணம் பூசுதல், ஏசி மெக்கானிக், கண்ணாடி அறுத்தல், சலவைக்கல் ஒட்டுதல் உள்ளிட்ட பல தொழில் இனங்களில் ஏழு நாட்கள் திறன் மேம்பாட்டு பயிற்சி, நாள் ஒன்றுக்கு 800 ரூபாய் ஊதியத்துடன், 50,000 தொழிலாளர்களுக்கு ரூபாய் 45 கோடியே 21 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் சி.வெ.கணேசன் பதிலுரை வழங்கினார்.

---

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதக்கரம் 50வது நாள்!

## கொளத்தூர் மேற்குப் பகுதியில் அமைச்சர்கள் ஆர்.காந்தி - பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினர்!

*சென்னை, ஏப்.11-*

*சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் 72-வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20-ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19-ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தை திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்களின் திருக்கரத்தால் துவங்கப்பட்ட இத்திட்டம் நேற்று 50வது நாள்.*





*"அன்னம் தரும் அமுதக்கரங்கள்" 50வது நாளான நேற்று சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் ஆர்.காந்தி கலந்துகொண்டு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்.*

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவாக சென்னை கிழக்கு மாவட்டம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு கழகத் தலைவரின் 72-வது பிறந்த நாளையொட்டி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஏற்பாட்டில் "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் உன்னதமான திட்டமானது 2025 பிப்ரவரி 20-ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19-ஆம் தேதி வரை 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.*

*இச்சிறப்புமிகு திட்டத்தை செயல்படுத்தும் வகையில் 20.2.2025 அன்று கொளத்தூரில் திருமதி.துர்கா ஸ்டாலின் அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். அந்த வகையில் 24-ஆம் நாள் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களும், 30வது நாள் உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் கோவி. செழியன் அவர்களும் கலந்து கொண்டு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்கள்.*

*இந்நிகழ்ச்சியானது வெற்றிகரமாக தொடர்ந்து 50வது நாளான நேற்று (10.04.2025), கொளத்தூர் மேற்கு பகுதி, கொளத்தூர், 69அ வார்டு, அகரம், செங்கல்வராயன் தெரு மற்றும் 69வது வார்டு, ஜி.கே.எம். காலனி, லோகோ பிரிட்ஜ் அருகில், முத்துக்குமரப்பா தெரு ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் ஆர். காந்தி அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்.*

*இச்சிறப்புமிக்க "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" திட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு அவர்கள் தினந்தோறும் காலை 7.00 மணியளவில் கலந்து கொண்டு பசியாக வரும் பொது மக்களுக்கு, பசியாற காலை உணவு வழங்கிக் கொண்டிருக்கிறார். இச்சிறப்புமிக்க திட்டமானது பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்று, அப்பகுதி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு காலை உணவு அருந்திவிட்டு, முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி வருகிறார்கள்.*

*"அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டமானது நேற்றுடன் (10.4.2025) தற்பொழுது 50 நாள் கடந்து, 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை தொடர்ச்சியாக துறைமுகம், திரு.வி.க நகர், அம்பத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர் தொகுதிகள் என கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் வழங்கப்பட்டு வருகிறது. திராவிட மாடலின் செயல்களில் ஒன்றாக இத்திட்டம் நடத்துவதில் சென்னை கிழக்கு மாவட்டம் பெருமை கொள்கிறது.*

*கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:*

*"அன்னம் தரும் அமுதக்கரங்கள்" பெயரில் ஒரு நாளைக்கு 1000 நபர்களுக்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் காலை உணவுகளை வழங்கி வருகிறார். அதனை பார்க்கும் போது எனக்கே சாப்பிடுனும் போல் உள்ளது. கல்யாண வீட்டில் கூட இந்த அளவுக்கு தரமான உணவு தருவார்களா என தெரியவில்லை.*

*50 ஆண்டுகளாக நான் அரசியலில் இருக்கிறேன். தலைவர் என்ன நினைக்கிறார் என்பதை பொறுத்து செயல்படுவேன். ஆனால் இவரை (இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள்) பார்க்கும்போது எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் இதுபோல் யாராலும் பண்ண முடியாது போல் செயல்படுகிறார். நமது முதலமைச்சர் அவர்கள் முன்மாதிரியாக செயல்பட்டு மாநிலத்துக்காக போராடி, வெற்றி பெற்று தமிழகத்துக்கு மட்டுமல்ல இந்தியாவே பாராட்டு தெரிவித்து வருகிறது. அப்படிப்பட்ட அவர் மனதில் இவர் (இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ) இருக்கிறார். இவரிடம் எந்த பொறுப்பு கொடுத்தாலும் தலைவர் நினைப்பதை கூட அதிக அளவு செயல்படுபவர்.*

*எனக்கு என்ன ஹேப்பி என்றால் என் வாழ்க்கையில் இது ஒரு மைல்கள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள், முதலமைச்சர் அவர்கள் தொகுதியில் இந்த நிகழ்வில் பங்கேற்க என்னை அழைத்தற்கு அவருக்கு மனதார நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.*

*நீட் தேர்வு தொடர்பாக நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டம் தொடர்பாக தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் விமர்சனம் செய்தது குறித்தான கேள்விக்கு :*

*இல்லை, இல்லை இதுதான் தப்பு, ஒரு தராதரம் இருக்கிறது. முதலில் அவர் யார் என சொல்லுங்கள், அவரை பற்றி நீங்கள் கேட்கிறீர்கள். அவர் எத்தனையோ ஆண்டுகளாக நடித்துக் கொண்டிருக்கிறார். ஒரு நல்ல நடிகர் எந்த குறையும் சொல்ல மாட்டோம். அய்யய்யோ ஃபர்ஸ்ட் கிளாஸ் நடிகர். அப்படியே தலையை அப்படி காட்டி, இப்படி காட்டி நடிப்பார் என ஆக்சன் செய்து காட்டினார். சினிமா வேறு, ஆனால் இது அரசியல். அவர் பொதுமக்களுக்காக என்ன பண்ணார் என நீங்களே சொல்லுங்கள். நான் சொல்லவில்லை எனவும் அதன் பிறகு அவர் கூறுவதற்கு நான் பதில் சொல்கிறேன். இவ்வாறு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி அவர்கள் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் வட டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., பகுதிச் செயலாளர்கள் எ.நாகராசன், ஐ.சி.எப். வ.முரளிதரன் மற்றும் கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர் செல்வம், துரைகண்ணன், ம.அசோக்கு மார், ஆர்.எஸ். சித்திக், எஸ்.தனசேகர், கே. சாரதா, டி.யோகப்பிரியா, என். தாவூத்பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்டச் செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ். ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என். பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம் ஒன்றிய தி.மு.க. சார்பில் திராவிட நாயகர் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கல் மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் மாவட்டக் கழகச்செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் சி.வி.கணேசன் நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் டி.குமார் வரவேறார். எஸ்.பி.வி.எஸ்.சத்யா சக்திவேல், எஸ்.ஆர்.அப்பாதுரை, ஐ.பாபுஷரீப், எஸ்.பி. நடராஜன், இ.நந்தா, பி.வி. அழகப்பன், பி.சேகர், ஆர்.தங்கராஜ், கே.கன்னிய ம்மாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறுவேடல் க.செல்வம் எம்.பி., தக்கோலம் தேவபாலன், கெ. ஞானசேகரன், ஞா.ஹேமலதா, கு.வசந்தி, கு.துரைவேல், ஜி. சிவராமன்,ப.சசிகுமார், என்.எஸ்.பாரிவள்ளல், என்.ரவி, ப.கார்த்திகேயன், பெ.மணி, டி.சஞ்சய்காந்தி, த.சத்திய மூர்த்தி, எஸ்.முரளிதரன், எஸ்.ஆர்.வெங்கடேசன் மற்றும் பலர் உள்ளனர்.

---

### சட்டமன்ற - நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் - 'இலக்கியச் செல்வர்'

# குமரி அனந்தன் மறைவு: தமிழ்நாடு சட்டப்பேரவை இரங்கல்!

## பேரவைத் தலைவர் புகழாரம் சூட்டினார்!

சென்னை, ஏப்.11-

சட்டப்பேரவை நேற்று முன்தினம் காலை கூடியதும், திருக்குற ளும் அதன் விளக்கமும் படிக்கப்பட்ட பின்னர், பேரவைத் தலைவர் அவர்கள், இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானத்தைப் படித்தார்.



பேரவைத் தலைவர் குறிப்பிட்டதாவது :-

'இலக்கியச் செல்வர்' என்று அழைக்கப்படும் குமரி அனந்தன் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்து பெருந்தலைவர் காமராசரின் அடியொற்றி, காங்கிரஸ் பேரியக்கத்துக்காக தன்னை ஒப்படைத்துக்கொண்டவர்.

அனைவரிடத்திலும் அன்போடும் நட்புணர்வோடும் பழகக்கூடிய குமரி அனந்தன் அவர்கள் 1980-1984, 1985-1988, 1989-1991 மற்றும் 1991-1996 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1977-1980 ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பாராட்டத்தக்க வகையில் சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

நாடாளுமன்றத்தில் தமிழில் பேசுவதற்கான உரிமையை நிலைநாட்டிய காரணத்தால், மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் "தனிமரம் தோப்பாகாது என்ற பழமொழியை மாற்றி அமைத்து விட்டார்" என இவருக்குப் புகழாரம் சூட்டினார்.

தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பங்காற்றியதற்காக இவருக்கு தமிழ்நாடு அரசால் 2024 ஆம் ஆண்டு "தகைசால் தமிழர் விருது" இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப் பட்டு கௌரவிக்கப்பட்டது.

அன்னாரது மறைவால் அவரை இழந்துவாடும் தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள் உள்ளிட்ட அவருடைய குடும்பத்தினருக்கும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு கூறினார்.


(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ப.உ. சண்முகம்

### ஏப்ரல் 11 (2007)



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அன்பும், நட்பும் கொண்டவர். திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும், கலைஞர் அவர்களின் அரசில் அமைச்சராகவும், கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**"தி.மு.க. வரலாற்று ஏட்டில் திருவண்ணாமலை இடைத்தேர்தல் ஓர் மகத்தான திருப்புமுனை. அந்தத் தேர்தலில் திருவண்ணாமலையிலேயே தங்கி, தேர்தல் பணியாற்றுமாறு அண்ணா அவர்கள் எனக்கு கட்டளையிட்டிருந்தார். அந்த இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க. வேட்பாளர் ப.உ. சண்முகம் அவர்களுக்கு ஒரு தனிச் சிறப்பும், தனிப் பெருமையும் வாய்த்தது என்றே சொல்லலாம். இடையிடையே என்னுடன் ஊடல் கொண்டாராயினும் – இறுதிவரை கொள்கைக் குன்றமெனத் திகழ்ந்த காரணத்தால் என் இதயத்தில் இடம் பெற்ற நண்பர்களில் ஒருவராகவே திகழ்ந்தவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் நினைவு கூரப்பட்டவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள், 1993ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், இவருக்கு அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்தார்கள்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**